




# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்

மின்னிதழ் மே 2025


# செயலர் பக்கம்




அருள்பணி. சு. மரிய சூசை


## அன்பு உறவுகளே!

அளவுகடந்த புனிதமும் தூய்மையும் கோவிலைப் போன்று அன்னையிடமும் உண்டன்றோ! தன்னிடம் வரும் எதையும் பரிசுத்தமாக்கும் பண்பு கோவிலைப் போன்று தாயிடமும் உண்டுதானே! தம்மை நாடி வருவோருக்கு ஆறுதலும் ஆதரவும் கோவிலைக் காட்டிலும் அம்மா தருவார் அல்லவா! இவ்வாறு "அன்னை ஓர் ஆலயம்" என்னும் ஆன்றோர் வாக்கு அர்த்தம் பல தருகிற அருள்வாக்கு என்பதில் ஐயமில்லை. அன்பின் சிகரமாய், அக்கறையின் ரூபமாய், தியாகத்தின் உச்சமாய் நடமாடும் அன்னை ஆலயத்தைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர் என்கிறது தமிழ் கூறும் நல்லுலகு. "அன்னை ஓர் ஆலயம்" என்பதைவிட, இன்னும் ஒரு படி மேலாக "தாயிற் சிறந்த கோவிலுமில்லை" என்று சொல்லி, கோவிலைக் காட்டிலும் தாய் சிறந்தவர் என்று தமிழ் மரபு தாயைப் பெருமைப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை அன்னையரை அகிலம் கொண்டாடி மகிழ்கிறது. அன்னையர்களுள் எல்லாம் உயர்ந்தவரும் உன்னதமானவருமாகிய மரியாவையும், கத்தோலிக்கத் திரு அவை இந்த மே மாதம் முழுவதும் கொண்டாடி மகிழ்கிறது. மே மாதம் அன்னையின் வணக்க மாதம். இது அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். இம்மாதம் அன்னை மரியின் அன்பில் அகமகிழ்ந்திருப்போம். அவரது அன்புச் சிறகுகளில் அடைக்கலம் புகுவோம். அவரைப் போலவே அன்பு பாராட்டி வாழ தீர்மானிப்போம். நம்மைப் பெற்ற அன்னையர்களை வாழ்த்துவோம்! நாமும் அன்னையுள்ளம் கொண்டு வாழப் பழகுவோம்!

# யூபிலி ஆண்டு அறிவோம்

## #7
## 21ஆம் நூற்றாண்டில் ...

CHRISTIAN LIFE COMMISSION TRICHY

| ஆண்டு | திருத்தந்தை | மையக் கருத்து | ஆணை அறிவித்த நாள் |
|---|---|---|---|
| 2000 "பெரிய யூபிலி" |  2ஆம் ஜான் பால் | "பாவ மன்னிப்பு, ஒப்புரவு & சமூக நீதி" | 29-11-1998 சாதாரண யூபிலி |
| 2015 |  | "தந்தையைப் போல இரக்கம் உடையவர்களாய்" | 11-04-2015 சிறப்பு யூபிலி |
| 2025 | பிரான்சிஸ் | "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" | 09-05-2024 சாதாரண யூபிலி |



# #8
# யூபிலி ஆண்டின் தயாரிப்பு...

CHRISTIAN LIFE
COMMISSION TRICHY

- "பெரிய யூபிலி" (2000) இறுதியில் திருத்தந்தை புனித 2ஆம் ஜான் பால், "இன்றைய குழந்தைகள் & இளைய சமூகத்தினர் வருகின்ற 2025 ஆம் ஆண்டு யூபிலியின் முக்கிய பங்காளர்கள்," என்ற குறிப்போடு 2025 ஆம் ஆண்டு யூபிலியை அறிவித்தார்.
- இச்சிறப்புமிக்க யூபிலி ஆண்டிற்குள் நாம் தகுந்த தயாரிப்புடன் அடியெடுத்து வைக்க வேண்டும்.
- தயாரிப்பு காலம் என்பது யூபிலி ஆண்டின் மகத்துவத்தையும், அதனுடைய சிறப்புமிக்க வரலாறு, அவ்வாண்டில் நமக்கு கிடைக்கும் சிறப்பான கடவுளின் அருட்கொடைகள், அதனை நாம் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் ஆகியன பற்றி நாம் தெரிந்து கொள்ளுதல் ஆகும்.
- அதற்காக நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,

  - 2023 ஆம் ஆண்டை, "இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளை கற்றல் ஆண்டு" என்றும்
  - 2024 ஆம் ஆண்டை, "இறைவேண்டல் ஆண்டு", என்றும் அறிவித்தார்.



கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு
திருவிவிலியம் - திருமறைக்கல்வி - திருவழிபாடு
திருச்சி மறைமாவட்டம்

# தன்னார்வ வேதியர் அடிப்படைப் பயிற்சி நான்காம் குழுவினருக்கான சான்றிதழ் வழங்கும் விழா

கடந்த 2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ஆம் தேதி சனிக்கிழமை அன்று முதல் 29.03.2025 அன்று வரை நடைபெற்ற தன்னார்வ வேதியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியில் நம் மறைமாவட்டத்தின் 7 பங்குகளிலிருந்து 24 நபர்கள் தொடர்ச்சியாக வகுப்புகள், களப்பணி, நூல் திறனாய்வு, மாதிரி மறைக்கல்வி வகுப்பெடுத்தல், எழுத்துத் தேர்வு ஆகியவற்றில் பங்கேற்று இப்பயிற்சியினை நிறைவு செய்தனர்.



இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழாவானது 06.04.2025 ஞாயிறு அன்று மாலை 6.00 மணி முதல் 8.30 மணிவரை ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்களின் தலைமையில் மறைமாவட்ட முதன்மை குரு பேரருள்பணி. அந்துவான், மறைமாவட்டப் பொருளாளர் அருள்பணி. ஜேம்ஸ் செல்வநாதன், மறைமாவட்ட முதன்மைச் செயலர் அருள்பணி. அமல்ராஜ், நல்லாயன் நிலைய இயக்குநர் அருள்பணி.அம்புரோஸ் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.மாத்தூர், முல்லைக்குடி ஆகிய இரு பங்குகளின் பங்குப்பணியாளர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.










நான்காம் குழுப் பயிற்சியாளர்களின் நடனம், நாடகம், முந்தைய 3 குழுவினரின் நடனம், நாடகம் என கலைநிகழ்வுகள் இனிதே நடைபெற்றன. நான்காம் குழுவினரின் பயிற்சி அறிக்கையும் முன்னாள் மாணவர்களின் களப்பணி அறிக்கையும் காணொளி வடிவில் சமர்ப்பிக்கப்பட்டன. பேரருள்பணி.அந்துவான், அருள்பணி. அம்புரோஸ் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம்பெற்றன. ஆயர் மேதகு ச.ஆரோக்கியராஜ் அவர்கள் 24 நபர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கினார். பின்பு அவர் தமது ஆசியுரையில் தன்னார்வ வேதியர்கள் கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவுடன் இணைந்து செய்த களப்பணிகளைப் பாராட்டியும் தொடர்ந்து அதே ஆர்வத்துடன் திருத்தூதுப் பணிகள் செய்ய வாழ்த்தியும் அனைவரையும் உற்சாகப்படுத்தினார்.

## இக்குழுவில் பயிற்சி பெற்றவர்களின் 7 பங்குகள் பின்வருமாறு:

- சுப்ரமணியபுரம் (8)
- தெப்பக்குளம் (4)
- முல்லைக்குடி (3)
- மாத்தூர் (1)
- உறையூர் (4)
- பழையகோவில் (3)
- பொன்மலை (1)



**இந்நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் உறவின் விருந்து வழங்கப்பட்டது.**



தன்னார்வ வேதியர் அடிப்படைப் பயிற்சி
சான்றிதழ் வழங்கும் விழா 2025




தன்னார்வ வேதியர் அடிப்படைப்






விழா












தன்னார்வ வேதியர் அடிப்படைப் பயிற்சி
சான்றிதழ் வழங்கும் விழா 2025









அடிப்படைப் பயிற்சி




வேதியர் அடிப்படைப் பயிற்சி


வேதியர் அடிப்படைப் பயிற்சி


சான்றிதழ் வழங்கும்



தன்னார்வ வேதியர் அடிப்படைப் பயிற்சி




தன்னார்வ வேதியர் அடிப்படைப் பயிற்சி










# இரண்டு படங்களுக்கு இடையே உள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து மகிழுங்கள்





